STC.No.268/2025 PW1. பாலமுருகன்

தேதி– 19.02.2026

எதிரி ஆஜர்.

<u>சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் படிக்கவில்லை. புகார்மனுவில் உள்ள விபரங்கள் எனக்கு படித்து காண்பிக்கப்பட்டதா என்றால் நான் கூறியதை வழக்கிறஞர் புகார்மனுவில் குறிப்பிட்டுள்ளார். புகார்மனுவை நான் படித்து பார்த்தேனா என்றால் படிக்க தெரியாது, வழக்கறிஞர் படித்து காண்பித்தார். எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பினை படித்து தெரிந்து கொண்டேனா என்றால் பதில் அறிவிப்பு வந்தது எனது வழக்கறிஞர் அதனை காண்பித்தேன். நான் அனுப்பிய அறிவிப்பிற்கு முற்றிலும் விரோதமாக எதிரிக்கு என்னை யார் என்றே தெரியாது என்று கூறி அவர் பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால் அது பொய்யாகும். GST என்றால் என்ன அரசாங்கத்திற்கு வரி கட்டுவதாகும்.

2. காசோலை திரும்பி விபரம் நான் எந்த தேதியில் தெரிந்து கொண்டேன் என்றால் 11.06.2025 ம் தேதியன்று தெரிந்து கொண்டேன். ம.சா.ஆ.2 என்ற ஆவணமானது வங்கியிலிருந்து 12.06.2025 ம் தேதியன்று எடுக்கப்பட்டதாக அதில் குறிப்பிட்டுள்ளது என்றால் முதலில் நான் சென்றபோது நகல் எடுக்க முடியவில்லை என்று மறுநாள் வரும்படி வங்கி மேலாளர் கூறினார். 05.01.2025 ம் தேதியன்று தனி பிராதில் எதிரி என்னிடம் எங்கு வைத்து பணம் கேட்டார் என்றால் எதிரியின் ஊரில் வைத்து கேட்டார், அதன்பின்பு ஊருக்கு வந்த பிறகு 2, 3 நாட்கள் போன் செய்து பணம் கேட்டார்.

3. நிரூபண வாக்குமூலம், வழக்கறிஞர் அறிவிப்பு ஆகியவற்றில் 05.01.2025 ம் தேதியன்று எதிரி பணம் கேட்டார் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் எதிரி கேட்ட விபரத்தை எனது வழக்கறிஞரிடம் கூறியிருந்தேன். ம.சா.ஆ.3 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய முகவரியானது No such Address என்று திருப்பப்பட்டது என்றால் தெரியாது.

வழக்கறிஞர் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு ஒரு விலாசம் இல்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.3 வழக்கறிஞர் அறிவிப்பில் அக்கர காரம் தெரு, சுப்பரமணிய கோவில் தெரு, வார்டு எண் 25, க.எண். 10 என்ற விலாசம் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். 25.06.2025ம் தேதியிட்டு வழக்கறிஞர் அறிவிப்பில் இராஜைய சந்து, வார்டு 25, சின்ன சவுண்டம்மன் கோவில் தெரு, க.எண் 10 என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான்.

4. மேற்படி இரண்டு வழக்கறிஞர் அறிவிப்பிலும் வெவ்வேறு முகவரிகள் குறிப்பிட்டுள்ளது என்றால் நான் முதலில் எழுதி வைத்திருந்த முகவரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் பின்னர் விசாரித்து தெரிந்து கொண்டேன், இரண்டாவது அறிவிப்பு அனுப்பினேன். 25.06.2025ம் தேதியிட்ட அறிவிப்பில் முதலில் அனுப்பிய அறிவிப்பின் விலாசம் தவறாக உள்ளது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனக்கு காசோலை திருப்பப்பட்ட விபரம் 12.06.2025ம் தேதி தான் தெரிந்துள்ளது என்றும், ஆனால் புகாரில் 11.06.2025ம் தேதி தெரிந்து கொண்டதாக பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. ஏலக்காய் வியாபாரத்திற்கும், கட்டிட தொழிலுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரிதான்.

5. எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பில் போடியை சேர்ந்த கந்து வட்டி கனி என்பவரிடம் 2021ல் எதிரி பணம் பெற்றிருந்ததாக குறிப்பிட்டுள்ளது என்றால் தெரியாது. அவர்களுக்குள் இருந்த வரவு செலவு முடிந்து விட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, எனது வழக்கை எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். கனி என்பவர் மீது பல நீதிமன்றத்தில் ஏமாற்றி மோசடி செய்ததாக பல வழக்குகள் நிலுவையில் உள்ளதாக பதில் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். 09.06.2025ம் தேதி கனி என்பவரும் அவருடன் சேர்ந்து மற்ற இரண்டு நபர்களும் எதிரியின் இருசக்கர வாகனத்தை பறித்து கொண்டதாக பதில் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளது என்றால் எடுத்திருக்கலாம், அதுக்கும் எனக்கும் சம்மந்தம் இல்லை.

6. மேற்படி இருசக்கர வாகனத்தில் உள்ள சீட்டில் அடியில் வைத்துள்ள காசோலையை எடுத்து என்மூலமாக இவ்வழக்கை

வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பியுள்ளதாக பதில் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளது என்றால் தெரியாது. அது சம்மந்தமாக எதிரி கனி என்பவர் மீது போடி காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி புகாரில் குற்ற வழக்கு தாக்கல் செய்ததாக தெரிந்து கொண்ட இருசக்கர வாகனத்தை எதிரியிடம் திருப்பி கொடுத்துவிட்டார் என்றால் தெரியாது. இது போன்று நடக்கமாட்டேன் என்று காவல்நிலையத்தில் அவர் எழுதி கொடுத்துள்ளார் என்றால் தெரியாது. நான் அனுப்பிய அறிவிப்பில் எதிரி காசோலையில் கீழ் கையொப்பம் செய்தார் என்று குறிப்பிடவில்லை என்றால் எதிரிதான் கையொப்பம் செய்து கொடுத்தார்.

7. வழக்கறிஞர் அறிவிப்பு, புகாரிலும் ரூ.2 லட்சம் எவ்வாறு எனக்கு கிடைத்து என்பதை குறித்து குறிப்பிடவில்லை என்றால் எனது வழக்கறிஞரிடம் கூறினேன். வழக்கறிஞர் அறிவிப்பு, புகார்மனுவிலும் எதிரி ரூ.2 லட்சம் கொடுக்கும் அளவிற்கு எந்த வசதிவாய்ப்பும் உள்ளது என்று குறிப்பிடவில்லை என்றால் எதிரி ஏலக்காய் கடை வைத்துள்ளார். ஏலக்காய் கடை எதிரி எந்த விலாசத்தில் வைத்துள்ளார் என்றால் சின்ன சவுடர்அம்மாள் தெருவில் வைத்துள்ளார். மேற்படி தெருவில் எதிரி கடை உள்ளதை என்பதை நிரூபிப்பதற்கு சாட்சிகளை விசாரிப்பதற்கு தயாரா என்றால் கடை இருப்பதாக எதிரி தான் கூறினார். எதிரியின் முகவரியை நேரில் பார்த்தேனா என்றால் இல்லை, எதிரியைதான் பார்த்தேன். என்னுடைய செல்போன் நம்பர் 7092749748 ஆகும். எதிரியின் செல்நம்பர் என்ன வென்றால் எனக்கு தெரியாது. எனது செல்போனில் பார்த்து சொல்ல முடியுமா என்றால் எனது செல்போன் ரீசட் ஆகிவிட்டது.

8. எதிரி நான் போனில் பேசியதை நிரூபிப்பதற்கு கால் பரிவர்த்தணைகளை தாக்கல் செய்ய தயாரா என்றால் தயார். நான் எதிரியை நேரில் பார்த்துபேசியது கிடையாது என்றும், எதிரியிடம் போனில் பேசியதற்கான ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல. எதிரியின் பதில் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள கனி என்பவரை பற்றி மறுத்து புகார் மனுவிலும், வழக்கறிஞர் அறிவிப்பிலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். காசோலையில் உள்ள விபரங்களுக்கு சம்மந்தமில்லாத விபரங்களை எதிரி பதில் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளதால் எதிரி மீது

காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். பதில் அறிவிப்பில் உள்ள விபரங்களை நான் ஒப்புக்கொள்கிறேன் என்றால் சரியல்ல. கனி என்பவருக்கு ஆதரவாக சேர்ந்து பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் என்மீது குற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. தாவா காசோலைக்கும் எனக்கும் எந்தவித வரவு செலவு கிடையாது என்றால் சரியல்ல. நான் சொன்னபோல் எனக்கும்,எதிரிக்கும் நேரடியாக வரவு செலவு உள்ளது என்று கூறுவது பொய் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுப்படி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.02.19 17:17:48 +0530

J.M, F.T.C(M.L),Uthamapalayam